

# பயணம்

இதழ்- 3 ஜூலை-2016

*ஸ்ரீ அண்ணன் சுவாமிகளிடம் சமர்ப்பிக்கப்படுகிறது--இறை நாட்டம் கொண்ட அன்பர்களுக்காக.....

www.sriannanswamigal.com

www.sriannanswamigalmobile.in

## முன்னுரை

இறைவனை நாடுபவர்கள்,பெரும்பாலும் தனது ஆரம்ப நாட்களில் பல குழப்பங்களுக்கு ஆளாகின்றனர். தூசி படிந்த அறையை சுத்தம் செய்ய முற்படும்போது பெரும் புழுதி கிளம்பி முன்பிருந்த வெளிச்சத்தையும் மறைப்பது போல ,ஆத்ம சாதகனுக்கு தற்காலிக இருளும், மயக்கமும் ஏற்படுகிறது. அப்போதெல்லாம் அவனுக்கு துணை, குருவின் அரவணைப்பு மட்டுமே. குருவருளும், இறையருளும் யாருக்கு கிடைக்கின்றதோ..அவர் பேறு பெற்றவர். அவ்வாறு அருள் கிடைக்க ஒரு சாதகன் தன்னை தயார் படுத்திக்கொள்வது மிகவும் அவசியம். இறைவனே எல்லாம் செய்வான் எனக்கு, என தமோ குண தாக்கத்தில் ஒருவன் உறங்கிகொண்டிருந்தால்,மேலும் மயக்கத்தில் ஆழ்ந்து போவான்.எனவே தேடலின் தீவிரம், சரணாகதியின் அவசியம்,இறைவன் நம்மை ஆட்கொள்ளும் விதம்,குருவின் அவசியம், குருவின் மகிமை, குருவின் அருள் இவற்றை பற்றி நன்றாக உணர்ந்து தெளிந்த மஹாத்மாக்களின் அனுபவங்களை இங்கு நாம் தருகிறோம்.இவை ஆத்ம சாதகர்களுக்கு, இறைஞான தரிசனம் என்ற பயணத்தில் ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

-இணைய நிர்வாகிகள்

# உள்ளே


| படைப்புக்கள் | பக்கம் எண் |
| --- | --- |
| அன்னையின் அம்சங்கள் | -04-08 |
| கேள்வி-பதில்கள் | - 09-12 |

# அன்னையின் அம்சங்கள்



( யோகி ஸ்ரீ அரவிந்தர் எழுதிய Mother என்ற புத்தகத்தின் தமிழாக்க நூலான அன்னை என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை தான் இவை. ஆத்ம சாதகனுக்கு மிகவும் பயனுள்ளவையாக இருக்கும் இவை.---- இணைய நிர்வாகிகள் )

உலகை இயக்கும் பராசக்தியின் வெளிப்பாடு நான்கு வகையாக உள்ளன.அவைகள்

1. ராஜராஜேஸ்வரியான மகேஸ்வரி
2. மஹா காளி
3. மஹா லெக்ஷ்மி
4. மஹா சரஸ்வதி

*சென்ற இதழில் ராஜராஜேஸ்வரியான மகேஸ்வரி மற்றும் மஹாகாளி இவர்களின் அம்சங்களை விரிவாக பார்த்தோம். இந்த இதழில் மகாலட்சுமியின் அம்சங்களை பார்ப்போம்...*

ஞானமும் சக்தியும் மட்டுமே பராசக்தி அன்னையின் வெளிப்பாடுகள் அல்ல.அதி நுண்ணிய இரகசியம் ஒன்று அவளது இயல்பில் உள்ளது.அது தடுத்தற்க்கு அரிய மோகன வசீகரத்தால் பொருள்களையும் சக்திகளையும் ஈர்த்துப்பிடித்து அவற்றை கூட்டி இணைக்கின்றது.மறைவிலுள்ள ஓர் ஆனந்தம் திரைக்குப் பின் நின்று தன் லீலையை நடத்தவும்,அவற்றை தனது சந்தங்களாகவும் வடிவங்களாகவும் ஆக்கவும் உதவுகிறது. இதுவே மகாலட்சுமியின் மாட்சி.

உடல் கொண்ட ஆன்மாக்களின் இதயத்துக்கு இவளைவிட வசீகரமான தெய்வசக்தி வடிவம் வேறு இல்லை. மகாலட்சுமியை அனைவரும் மகிழ்ந்து விரும்பி நாடுகின்றனர். ஏனெனில் அவள் இறைவனின் இனிமையை-போதை தரும் அந்த ஜாலத்தை வீசுகிறாள். அவள் அருகில் இருப்பது ஆழ்ந்த ஆனந்தமாகும். இதயத்தில் அவளை உணர்வது வாழ்வை ஓர் ஆனந்த பரவசமாக, அற்புதமாக ஆக்குவதாகும்.வனப்பும்,வசீகரமும், மென்மையும்

கதிரவனிலிருந்து ஒளி வருவதுபோல் அவளிடமிருந்து பெருகி வருகின்றன. அவள் தனது அற்புத நோக்கை நாட்டுமிடமெல்லாம், புன்னகை எழிலை பொழியுமிடமெல்லாம், ஆன்மா பிடிபட்டு, அவளுக்கே ஆட்பட்டு, அளவில்லா ஆனந்தத்தின் ஆழங்களில் அமிழ்த்தப்படுகிறது. அவள் கரங்களின் ஸ்பரிசம் காந்தம் போன்றது.

அவற்றின் ரகசிய நுண்ணிய ஆளுமை மனத்தையும்,பிராணனையும்,உடலையும் மாசு நீக்கி நயமாக்குகிறது.அவள் மலரடிகளை ஊன்றிய இடமெல்லாம் அற்புத பரவச ஆனந்த ஓடைகள் பொங்கிப் பாய்கின்றன.

ஆயினும் இந்த மோகன சக்தி கோருவதை நிறைவேற்றுவதும் அவளது சாந்நித்தியத்தை தரிப்பதும் எளிதன்று. மனதிலும் ஆன்மாவிலும் அழகு,இசைவு; எண்ணங்களிலும் உணர்ச்சிகளிலும் அழகு,இசைவு; ஒவ்வொரு புறச்செயலிலும் நடையிலும் அழகு,இசைவு; வாழ்விலும்,சூழலிலும் அழகு இசைவு இவற்றை மகாலட்சுமி கோருகின்றாள். அவலட்சணமானவை, சிறுமை உடையவை, அர்ப்பத்தனமானவை, தரித்திரம் பிடித்தவை, கீழானவை, அழுக்கானவை,முரட்டுதனம்

கொண்டவை, பண்பு நயமற்றவை ஆகியவெல்லாம் அவள் வருகையை தடுக்கின்றன. அன்பும் அழகும் இல்லாத அல்லது அவை பிறக்க விரும்பாத இடத்தில் அவள் வருவதில்லை.அவை இழிவானவற்றுடன் கலந்து உருத்திரிதிருந்தால் அவள் விரைவில் திரும்பி போய்விடுகிறாள் அல்லது தன் செல்வங்களை பொழிய உளம் கொள்வதில்லை.

மனித இதயங்களில் இறங்கும் போது அங்கு சுயநலம், பகைமை, பொறாமை, குரோதம், அசூயை, பூசல் இவை சூழ்ந்திருக்ககண்டால்; துரோகமும் பேராசையும் நன்றியின்மையும் புனித பாத்திரத்தில் கலந்திருந்தால்; முரட்டு வெறியும் பண்பற்ற ஆசையும் பக்தியை மாசு படுத்தினால் அத்தகைய உள்ளங்களில் அழகும் அருளும் பொழியும் தேவி தங்குவது இல்லை. ஒரு தெய்வீக அருவருப்புடன் அவள் விலகி சென்றுவிடுகிறாள். ஏனெனில் அவள் வற்புறுத்தி வருந்தி முயல்பவள் அல்லள். நமது கசப்பான விஷப்பொருள்கள் வெளியேற்றப்படும் வரை காத்திருந்து அதன் பிறகே வருகிறாள்.

சன்னியாச வறட்சியையும் கடுமையையும் அவள் விரும்புவது இல்லை. இதயத்தின் ஆழ்ந்த உணர்ச்சிகளை அடக்குவதும் ஆன்மாவின் அழகு

அம்சங்களை ஒடுக்குவதும் அவளுக்கு சம்மதமில்லை. ஏனெனில் அன்பு, அழகு இவை மூலமே அவள் மனிதர்களை கடவுளின் செல்வாக்கின்கீழ் கொண்டுவருகிறாள்.

அவளது மஹோன்னத படைப்புக்களில் வாழ்வு ஒரு தெய்வீக கலைசெல்வமாக மாறுகிறது. உலகம் ஒரு திவ்யானந்த கவிதையாகிறது.அவளது ஐக்கிய திருஷ்டியாலும் ஆத்ம வீச்சினாலும் மிக எளிய சாதாரண பொருள்களும் அதிசய மானவையாகிவிடுகின்றன. அவளை இதயத்தில் ஏற்றால் ஞானத்தை அற்புத சிகரங்களுக்கு உயர்த்தி அறிவை கடந்த ஆனந்த பரவசத்தின் ஆழ்ந்த மறைபொருள்களை அதற்கு வெளிப்படுத்துகிறாள். பக்தியை தீவிர தெய்வீக வசீகரத்துடன் இணைக்கின்றாள். வலிமைக்கும் சக்திக்கும் அளவுடன் இசைந்து செயல்படுவதற்கான சந்தத்தை கற்பிக்கின்றாள். சித்தியின் மீது அதை என்றும் நிலைத்து நிற்கசெய்யும் மோகன சக்தியை வீசுகிறாள்.

தொடரும்...

# கேள்வி.. பதில்கள்..

## சுவாமி சிவானந்தரின் நூலிலிருந்து ..



- எங்கு நிலையான இன்பத்தை ஒருவன் காணமுடியும்?
- தனது ஆன்மாவினுள்..

- எது மிகவும் தொல்லை தரும் புலன்?
- நாக்கு.

- யார் உனது மோசமான எதிரி?
- அடங்காத மனம்.

- யார் உனது சிறந்த நண்பர்?
- பெரியோர்களுடனான சத்சங்கம்.

- யார் உனது உண்மையான தந்தை?
- குரு.

- எது மொழிகளில் சிறந்தது?
- இதயத்தின் மொழி.

- நற்குணங்களிலேயே சிறந்தது?
- பிரம்மச்சரியம்.

- எது மோசமான மயக்க பொருள்?
- காமம்.

- புனிதமான நதி எது?
- பிரம்ம ஞானம்

- யார் உண்மையிலேயே அரசன்?
- ஆத்ம ஞானி.

- உயர்ந்த தர்மம் எது?
- தன்னலமற்ற தொண்டு..

- குணத்திலேயே மோசனமானது?
- சினம்.

- உலகிலேயே மனிதனுக்கு நல்லது செய்வது எது?
- வலி. (அறிவுக்கண்களை திறப்பதால்..)

- எது சிறந்த உணவு?
- ஞானிகளின் மொழிகளை கேட்பதும், படிப்பதும்..

- யார் சிறந்த மனிதர்?
- கருணை உள்ளம் கொண்டவர்.

- யார் மோசமானவன்?
- சுயநலவாதி.

- மோசமான நரகம் எங்கு உள்ளது?
- பொறாமை,ஏமாற்றுதனம், வெறுப்புணர்ச்சி நிரம்பிய மனத்தில் உள்ளது.

- சிறந்த சொர்க்கம் எங்கு உள்ளது?
- அன்பு, கருணை, பெருந்தன்மை நிரம்பிய இதயத்தில்..

- எது சிறந்த அறிவியல்?
- இறை ஞானம்/ஆத்ம ஞானம் அடையும் வழி./முறை.

தொடரும்...

** இதழ் முற்றும் **

